# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 325/2015**

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : பிச்சை | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது பொம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்னார். பொம்மிநாயக்கன்பட்டி விலக்கில் ஆண்டிபட்டி செல்வதற்காக மாலை 7.30 மணியளவில் நானும் தர்மராஜ்யும் நின்றுக்கொண்டியிருந்தோம அப்போது இருசக்கர வாகனத்தில் எனது மகன் அவர் பெரியம்மா பொங்களுக்கு வரச்சொன்னாதாக சொல்லிக்கொண்டு சுப்புலாபுரம் சென்றார். பின்னர் அரை மணிநேரம் கழித்து ஆண்டிபட்டிக்கு ஆட்டோவில் வந்துகொண்டியிருந்தோம். சுப்புலாபுரம் பஸ்ஸடாப்பிற்கு 50 அடிக்கு முன்னால் நின்றுக்கொண்டியிருந்த லாரி மீது மோதி எனது மகன் அவருடன் சென்ற கார்த்திக், ஆனந்தராஜ் ஆகியோர் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். காவல் நிலையத்தில் தகவல்கொடுத்தேன். பின்னர் இறந்து போனவர்களை க.விலக்கு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் தன்னை விசாரிக்கவில்லை.

கு.வி

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 325/2015**

DEPOSITION OF WITNESS : P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : தா்மராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது பொம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்னால் 8.00 மணியளவில் ஆண்டிபட்டிக்கு செல்வதற்காக நானும். பிச்சையும் பொம்மிநாயக்கன் பட்டி விலக்கில் நின்றுக்கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1 பிச்சையின் மகன் 2 போ்களுடன் இருசக்கர வாகனத்தில் சுப்புலாபுரத்திற்கு சாமி கும்மிட செல்வதாக சொல்லிவிட்டு சென்றாா். பின்னால் வந்த ஆட்டோவில் நானும், பிச்சையும் சென்று கொண்டியிருந்தோம். எங்கள் முன்னால் 50 அடி தொலைவில் லேசாக சாரள் மழை பெய்தது இருட.டாக இருந்தது நின்றுக்கொணடியிருந்த லாரி மீது இருசக்க்ர வாகனத்தில் சென்றவா்கள் மோதி அந்த இடத்தில் இறந்துவிட்டாா்கள். ஆட்டோவை நிறுத்த சொல்லி பாாத்தபோது பிச்சை மகன் மற்றும் இரண்டு பேரும் இறந்துவிட்டாா்கள். காவல் நிலையம் சென்று புகாா் கொடுத்தேன். பின்னா் இறந்தவா்களை க.விலக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலீசாா் தன்னை ் விசாரித்தனா்.

கு.வி

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 325/2015**

DEPOSITION OF WITNESS : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : மாடசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது பொம்மிநாயக்கன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முனனால் பொம்மிநாயக்கன்பட்டியிலிருந்து ஆண்டிபட்டிக்கு வந்து கொண்டியிருந்தேன் பொம்மிநாயக்கன்பட்டி விலக்கில் பிச்சை என்பவரும் தா்மராஜ் என்பவரும் ஆட்டோவில் ஏறிவந்தபோது சுப்புலாபுரம் விலக்கு அருகில் இரண்டு முன்று பைக் இருநதது நிறுத்தி பார்த்தபோது சிக்கனல் இல்லாமல் நின்று கொண்டியிருந்த லாரி மீது மோதி 3 பேரும்இறந்துபோய்யிருந்தார்கள். பின்பு ஆம்புலன்ஸ் மூலம் க.விலக்கு மருத்துவமனையில் சேர்த்தார்கள் போலீசார் தன்னை விசாரித்தனர்.

கு.வி.